# இந்து சட்டம் ஆண்டவன் படைப்பாம்!

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.
MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (25—4—50) வெளியூர் (26—4—50) [இதழ் 235

## அதனை மாற்றுவதும் திருத்துவதும் ஆகாத செயலாம்

## வைதிகத்தின் வறட்டுவாதம்

### கூடினர், பேசினர்; கருத்து ஒற்றுமை கண்டாரில்லை!

### புதுடில்லி மாநாடு முடிவுற்றது

வைதிகம், சீர்திருத்தம் ஆகிய இரு முகாம்களைச் சேர்ந்தவர்களுடைய தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

டாக்டர் அம்பேத்காரின் இந்து சட்டத்திருத்தம் எதையும் வைதிகர்கள் ஏற்றுக்கொள்ள சித்தமாக இல்லை. இந்து சட்டம் கடவுளால் இயற்றப்பட்டதென்றும், அதை மாற்றி அமைப்பது கூடாத செயல் என்பதும் அவர்களுடைய கருத்து. இருதார மணம் கூடாது, விவாக விடுதலை தேவை என்ற விஷயங்களில், வைதிகர்கள் சீர்திருத்தவாதிகளின் கருத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர், என்று சொல்லப்படுகிறது".

இது, இந்து சட்டத்திருத்த மசோதாபற்றிய மாநாட்டுச் செய்தியின் சாரம்.

"புதுடில்லி மாநாடு முடிவடைந்தது" என்ற தலைப்பில் இச்செய்தி காணப்படுகிறது.

ஆம், மாநாடு முடிந்துவிட்டது. மூன்றுநாள் தொடர்ந்து நடைபெற்று முடிவடைந்துவிட்டது.

மாநாட்டுக்குச் சீர்திருந்தவாதிகளின் சார்பிலும், வைதிகபுரியினர் சார்பிலும் சிலர் பிரதிநிதிகளாக வந்திருந்தனராம். அவர்கள் ஏதோ சில தீர்மானங்களைத் தயாரித்து, மாநாடு நடத்தியவர்களிடம் தந்து, அவற்றை நிறைவேற்றும்படி கேட்டிருக்கின்றனர். ஆனால் யாருடைய தீர்மானமும் நிறைவேற்றப்படாமலேயே மாநாடு முற்றுப்பெற்று விட்டதாம்.

மேலும் இந்த மாநாட்டில் வைதிகபுரியினரின் கருத்தைச் சீர்திருததவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை; சீர்திருத்தவாதிகளின் கருத்தை வைதிகர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, என்று சொல்லப்படுகிறது.

வைதிகத்தின் கருத்துக்களை சீர்திருந்த உலகம ஏற்றுக்கொள்ளவில்லை என்பது ஆச்சரியத்துக்குரிய செய்தியல்ல. இது இன்று நேற்றல்ல, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் நிலைமை. எனவே, இன்று, இந்து சட்டத் திருத்த மசோதாபற்றிய விஷயத்தில் சீர்திருத்த வாதிகளின் போக்கைக் கண்டு வைதிக புரியினர் வாடுகின்றனரே என்று யாரும் கவலைப்படத் தேவையில்லை.

ஆனால் அதே சமயத்தில் வைதிக புரியினரின் கருத்தை சீர்திருத்தவாதிகள் ஏற்றுக்கொள்ள வில்லையே என்று வருந்துவதும் தவறு. சீர்திருத்தவாதிகள் எப்படி அதனை ஏற்றுக்கொள்ள முடியும்? வைதிக புரியினர் சஞ்சரிக்கும் உலகம் வேறு, சீர்திருத்தவாதிகள் வாழும் உலகம் வேறு. வைதிகர்கள் ஆயிரமாயிரம ஆண்டுகட்கு முந்திய உலகைக் காண்பவர்கள். சீர்திருத்தவாதிகள் இனி, ஓராயிரம் ஆண்டுகட்குப்பின் என்ன நிகழும், உலகம் எப்படி இருக்கவேண்டும் என்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## கோவையில் பஞ்சத்தின் சாயல்

### குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் குமுறுகின்றனர்

—(0)—

### வேலை இல்லாத்திண்டாட்டம் அதிகரிக்கிறது

கோவை, ஏப். 23—

ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவிக்கும் நெருக்கடியான நிலை கோயம்பத்தூர் ஜில்லாவின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ளது. தாராபுரம், திருப்பூர், உடுமலைப்பேட்டை தாலுகாக்களில் நிலைமை மிகவும் நெருக்கடியான நிலையை அடைந்துள்ளது. பலர் கீழ் பவானி திட்டத்தில் கூலி வேலைசெய்து பிழைக்க வந்து குவிந்துகொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் நிலம் வைத்திருப்பவர்களுக்கு வேலை கொடுக்க ரோட் வேலையும், கிணறு வெட்டும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

குடி தண்ணீர் கிடைப்பதுகூட பல பகுதிகளில் கஷ்டமாக இருக்கிறது. சிறிய தோட்டப் பயிர்கள் வைப்பதற்குக்கூட கிணறுகளில் தண்ணீர்வரவில்லை. ஈரோடு, தாராபுரம், திருப்பூர், உடுமலைப்பேட்டை தாலுகாக்களில் குடி தண்ணீர் கிணறுகள் ஆழமாக்கப்படுகின்றன.

உணவு நிலைமை இந்த ஜில்லாவில் பற்றுக்குறையாகத்தான் இருக்கிறது கோவை ஜில்லா கலெக்டர் தோழர் வி.என். ராஜன் தம்முடைய வாராந்திர அறிக்கையில் உணவு நிலைமை திருப்திகரமாக இல்லை யென்று கூறுகிறார்.

கால்நடைகளுக்குக்கூட வைக்கோல் போன்ற தீனி கிடைக்காத காரணத்தால் சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஜில்லாக்களிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டுவருகிறது.

### ரஷ்யா ஜெர்மனியில் அதிகாரிகள் மீது நடவடிக்கை

பெர்லின், ஏப். 24—

ரஷ்ய ஜெர்மனியில் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிய வருகிறது. பன்னிரண்டு கலை அதிகாரிகள் மூடிவிடுவதாகவும், சிறிதளவே மைப்பற்றுவதாகவும் டெப்ளிகல் என்ற பத்திரி கூறுகிறது.

### மணிக்கு நான்கு மைல் செல்லும் மோட்டார்கார்!

வியன்னா, ஏப். 24—

உலகிலேயே மிகப்பழமையான பெட்ரோலில் ஓடும் மோட்டார் வண்டி அது கண்டுபிடிக்கப்பட்ட தினக் கொண்டாட்டத்தை ஒட்டி ஓட்டிக் காட்டப்பட்டது.

75 ஆண்டுகளுக்கு முன்பு இக்கார் தயாரிக்கப்பட்டதாகும். இக்கார் உயர்ந்த பட்சமாக மணிக்கு 4 மைல்தான் செல்லுமாம்.

### கம்யூனிஸ்டுகள் கூட்டத்தில் கைகலப்பு

பாரிஸ், ஏப். 24—

பிரிட்டானியில் கம்யூனிஸ்டுகள் நடத்திய கூட்டம் ஒன்றில், இருவகை குண்டர்கள் வீசப்பட்டதின் காரணமாக கைகலப்பு ஏற்பட்டுவிட்டது. 12 பேர்கள் படுகாயமடைந்தனர்.

## ஆஸ்திரேலியாவில் அடக்குமுறை ஆட்சி ஆரம்பம்

—(0)—

### கம்யூனிஸ்டுகளின் ஆர்ப்பாட்டமும் ஆட்சியாளரின் கெடுபிடியும் வலுக்கிறது

ஸிட்னி, ஏப். 24—

வருகிற திங்களன்று ஆஸ்திரேலிய கம்யூனிஸ்டுகள் ஊர்வலமாக வந்து கான்பெர்ரா பார்லிமெண்ட் முன்பு ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்று தெரிந்ததின்பேரில், அவர்களை கலைத்து தடுப்பதற்காக போலீஸ் படைகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றனர்.

அன்று ஆஸ்திரேலியா பிரமர். பார்லிமெண்ட் முன்பு கம்யூனிஸ்டு ஸ்தாபனங்கள் சட்டவிரோதமானவை என்று தடை விதிப்பதற்கான மசோதாவைக் கொண்டு வரவிருக்கிறார். பார்லிமெண்டிற்குள் நுழைய முயற்சிசெய்யும் குழு சுமார் 200 கம்யூனிஸ்டுகள் இருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கம்யூனிஸ்டுகள் ஏற்கனவேயே தலைமறைவாக செல்ல திட்டம் போட்டு விட்டதாகத் தெரிகிறது. அவர்கள் தங்கள் தலைமைக் காரியாலயக் கட்டிடத்தையும் விற்றுவிட்டனராம்.

### தென் பசிபிக் கமிஷன் மாநாடு

லண்டன், ஏப். 24—

பிஜி தீவில் ஸுவா என்ற இடத்தில் பிஜி கவர்னர் சர் பிரியன் க்ரீஸ்டன் தலைமையில் தென் பசிபிக் கமிஷன் மாநாடு ஆரம்பமாயிருக்கிறது.

இதில் பிரிட்டன் ஆகிய நாடுகள் இதர தீவுகள் எல்லாம் சேர்ந்த சுமார் 16 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கின்றனர். இந்நாடுகளின் பொருளாதார முன்னேற்றம், பொது அபிவிருத்தி முதலியவைபற்றி இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

## மின்சார ஒளிபட்டால் அரங்கநாதர் அழிந்துவிடுவாராம்!

### ஸ்ரீரங்கம் அர்ச்சகர்கள் அலறல்

"மதவிரோதமானது பூஜை முறைக்கு ஒவ்வாதது. பண்டைகாலந்தொட்டுப் பரந்தாமனைப் பணிந்து வந்தபக்தி முறைக்கே மாறானது; மின்சார சக்தி அருகில் இருந்தால் 'கர்பகிரஹத்'தில் உள்ள செப்பாலடிககப்பட்ட ஆண்டவன் உருவம் சிதைந்து விடும்" என்று கூறுகிறார்கள் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் அர்ச்சகர்கள்!

ரங்கநாதர் கோயில் 'கர்பகிரஹ'த்தின் மின்சாரவிளக்குகள் போடவேண்டுமென்று சென்னை சர்க்கார் கொண்டு வந்த திட்டத்தை எதிர்த்து அர்ச்சகர்கள் கூறும் அபிப்பிராயமே இது.

ஸ்ரீரங்கம் வாசிகள்தான் யாரென்று உங்களுக்குத் தெரியுமே! அவர்களும் அவ்வாறுதான் கூறுகிறார்கள். ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆண்டவன் தொழுகைக்கு ஆலயத்தின் பிரகாரத்தில் கூடி இருக்கும்போது, மின்சார விளக்குகள், கோளாறுகளால் திடீர், திடீரென்று அணைந்து விடுமே, அதனால் ஆபத்து ஏற்படும், 'வேண்டாம் மின்சாரம்' என்று சர்க்காருக்கு அறிவித்திருக்கிறார்கள். மின்சார விளக்குகளின் ஒளியைத் தேடிவரும் விட்டில் பூச்சிகள் 'தீர்த்தத்தில்' விழுந்து பக்த கோடிகள் அருந்தும் 'முக்தி நீரில்' விழுந்து புனிதத்தன்மையை இழக்கச் செய்து விடும் என்றும் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## கம்யூனிஸ்டுக்கு உதவிய முதலாளி

—(0)—

### கைதுசெய்யப்பட்டார்

கொல்லம், ஏப். 22—

கம்யூனிஸ்டுகளுக்குத் தாராளமாகப் பண உதவி செய்தாரென்று குற்றம் சாட்டி தோழர் டி. கெ. அலெக்சாண்டர் என்னும் தோட்ட முதலாளி பத்தனுபுரம் என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஆதரவு காட்டியதுடன், அக்கட்சிக்குப் பொருள் உதவி செய்துவந்தாரென்று வட திருவாங்கூரில் கைது செய்யப்பட்ட ஒரு பிரபல கம்யூனிஸ்டுத் தலைவர் வைத்திருந்த குறிப்புகள் காட்டிற்றும்.

தோழர் அலெக்சாண்டர் வீடு நன்றாகச் சோதிக்கப்பட்டது. இவரை முதல் மாஜிஸ்ரேட், மூன்று நாள் காவலில் வைக்கும்படி உத்திரவு பிறப்பித்துள்ளார்.

# மாலை மணி

சென்னை 25—4—50 செவ்வாய்க்கிழமை


# ஓர் எச்சரிக்கை

"குடி தண்ணீர் கூட கிடைக்கவில்லை. உணவு நெருக்கடி அதிகரித்துள்ளது; வீடு, நிலம் படைத்தோரெல்லாம் வேலை தேடிச்செல்கின்றனர்' என்று, கோவை மாவட்டத்திலிருந்து பயங்கரமான செய்தி கிடைத்துள்ளது.

கோவையில் மட்டுமல்ல; தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இதே நிலை இன்று ஏற்பட்டுள்ளது. நான்காண்டுகளாகக் காலமழை சரியாகப் பெய்யவில்லை. அரை விளைச்சல், கால் விளைச்சல் என்று அறுவடை நடக்கிறது. காரணம், பயிரிடப்படும் பெருவாரி நிலங்கள் மழையை நம்பி இருப்பது தான்.

நாட்டில் பல நதிகள் உள்ளன. அவைகளின் வெள்ளப் பெருக்கம் வங்காளக்கடலையே நிரப்புகின்றது. குறுக்கே அணைபோட்டு, நாட்டின் பயனுக்கு ஆற்று நீர் உதவுவதையே நாகரிக சர்க்கார் செய்யவேண்டியது. ஆறு கோடி ரூபாய் தேவை ஆறுகளுக்கு அணைபோட என்று கேட்டார் தோழர் பக்தவத்சலம். ஆனால் அவருக்குக் கிடைத்த பதில் அவசரம் இல்லை திட்டங்களை நிறுத்திவையுங்கள், என்று. இதை நாம் அன்றே குறிப்பிட்டோம் ஐக்கிய மாகாணம் அரிசிக்கு அதிக விலை கேட்டபோது.

இன்று நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது கோவை மாவட்டம் பெரும் 'ஆட்டத்துக்குள்ளாகி யுள்ளதென்று' மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை; மழை இல்லாததால் பயிர் ஏறவில்லை; ஆழத் தோண்டினால்தான், கிணறுகளில் குடி தண்ணீராவது கிடைக்கிறது; கால் நடைகள் தீனி திருச்சியிலிருந்தும், சேலத்திலிருந்தும் வாங்கப்படுகிறது; அது மட்டுமல்ல விவசாயத் தொழிலாளிகள் வேலை கிடைக்காமல் திண்டாடி கீழ்பவானி திட்டத்தில் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றனர். போதாக் குறைக்கு அம்மை நோய் மக்களைப் பிடித்து வாட்டுகிறது என்று. அடுத்து நமக்குக் கிடைக்கும் செய்தி எவ்வாறு இருக்கும்?

ஆழத் தோண்டினாலும் கிணறுகளில் ஈரம் தென்படவில்லை. உணவுப் பொருள்கள் விலை கொடுப்பவர்க்கே கிடைக்கவில்லை; வேலை தேடித் திரியும் தொழிலாளிகள் விழுந்து உயிர் விடுகின்றனர், என்றவ்வாறாக இருக்கக்கூடும். பஞ்சம் ஏற்பட்டுள்ளது ஒரு நாட்டில் என்று கூறினால், இதைவிட வேறு என்ன நடக்கப் போகிறது?

வளமான வண்டல் கொண்டு சேர்ப்பது கங்கையாறு; அதன் முகத்துவாரத்தில் இருக்கும் வங்கத்தில் ஏழாண்டுகளுக்கு முன் கொடிய பஞ்சம். நாற்பது லட்சம் மக்கள் நடுத்தெருவில் மாண்டு போனார்கள் அவ்வளவு பேர் இறக்கவில்லை, பத்து லட்சம் பேர்தான் என்று அமெரி கூறினார் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில். அதே போன்று இன்று நம் மந்திரிகள் கூறுகின்றனர். சுற்றுப் பிரயாணம் செய்யும் மந்திரிகள் முதலாளிகளின் மாடிவீடுகளில் தங்கிவிட்டு வந்து விடுகிறார்கள். அவர்களுக்கு அதனால் நாட்டின் உண்மை நிலையை அறிந்து கொள்ளமுடியவில்லை! இல்லாவிட்டால், நாட்டின் நல்ல நிலை தான்நிலவுகிறது. பஞ்சத்தைப் பற்றிப் பயப்படவேண்டியதில்லையென்று கூறுவார்களா?

வட ஆற்காடு ஜில்லா வற்றி விட்டது; மக்கள் மருண்ட நிலையை அடைந்துள்ளனர். செங்கற்பட்டில் சிறிதும் நம்பிக்கை இல்லை; திருநெல்வேலி மக்கள்; நெல்லைக் கண்டே நெடுநாள் ஆகியிருக்கும். பங்கீடு அரிசியே வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் காரணத்தால்! கூலி இரண்டணா கூட்டிக் கேட்பதைக் கொடுக்க விருப்பாமல், ஆயிரம் வேலி நிலத்தைத் தரிசாகப் போடுகிறார்கள் தஞ்சை மிராசுதாரர்கள்! தொழிலாளிகள் மட்டுமல்ல, நிலம் படைத்தோர் பலரும் ஏதாவது வேலை கிடைக்குமாவென்று நகரங்களை நோக்கி நாள்தோறும் வந்துகொண்டே இருக்கிறார்கள். இது வேடிக்கைக்காகக் கூறுவதல்ல. சென்னை நகரத்தை ஒருநாள் சுற்றிவந்தாலே தெரிந்து கொள்ளலாம்!

வாழப்பிறந்த மக்கள் வயிற்றின் கொடுமைக்கு வழி செய்துதான் ஆகவேண்டும். வழிபிறக்காவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல, அரசியலே மாறவேண்டிய நிலை ஏற்படும். சீனா சிவப்பேறியது நம் காலத்தில்தான, அதையாரும் மறந்து விடக் கூடாது; புறக்கணிக்கவும் முடியாது. சிலராக இருக்கின்ற காரணத்தால் சுட்டு வீழ்த்தி விடலாம். சிலர் பலராக ஆகி விட்டால்.........!

ஆகையால், ஆட்சியாளர் ஆவனசெய்ய உடனே முன்வர வேண்டும்.

## ஐரோப்பாவின் மிகப் பெரிய கடிகாரம்

ஆஸ்லோ, ஏப். 24—

ஐரோப்பாவிலேயே மிகப் பெரியதான கடிகாரம் நார்வே தலைநகரான ஆஸ்லோவின் டவுன்ஹால் டவரின் மீது வைக்கப்பட்டிருக்கிறது.

இதைச் செய்துமுடிக்க மட்டும் 19 வருஷங்கள் பிடித்ததாம்.

இக் கடிகாரத்தின் குறுக்களவு 27 அடி, நிமிஷத்தைக் காட்டும் முள்ளின் நீளம் 6 அடி. இதை கடற்கடலிலிருந்தும் பார்த்து, மணி தெரிந்துகொள்ள முடியுமாம்.

இதன் திறப்புவிழா மே மாதம் நடைபெறவிருக்கிறது.

## ஹயினன் தலைநகரில் செஞ்சீனப்படைகள் புகுந்தன

ஹாங்ஹாங், ஏப். 23—

ஹய்ஹவ்விலிருந்து கிடைத்திருக்கும் செய்திமூலம், சீனக் கம்யூனிஸ்ட் படைகள் ஹையினன் தீவின் தலைநகருள் புகுந்து விட்டதாகத் தெரிகிறது.

தேசிய சர்க்கார் படைகள், நகரைவிட்டு ஓடிவிட்டதாம். தேசிய சர்க்கார் படைத்தலைவர், தனது தலைமைக் காரியாலயத்தை அவ்விடத்தைவிட்டு மாற்றி விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

## சூடானில் புதுக்கட்சி

செய்ரோ, ஏப். 24—

சூடான் சட்டசபையில் எதிர்கட்சி மெம்பர்களான முகம்மது அகமதுமாகோபும், அகமது யூசப் ஹாஷிமும் ஸாலா அப்துல் காதரும் சமீபத்தில் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டனர். இவர்கள் புதுக்கட்சி ஒன்றை அமைக்கப்போவதாகவும், சூடானுக்கு சுதந்திரம்பெற முயற்சிப்பதே அக்கட்சியின் நோக்கமாக இருக்கும் என்றும் தெரிகிறது.

## கண்ணை இழந்ததற்கு நஷ்ட ஈடு ரூ. 28600

லண்டன், ஏப். 24—

விளையாட்டுத் துப்பாக்கிகள் உற்பத்தி செய்யும் கம்பெனியில் ஒரு விபத்து ஏற்பட்டு, ஒரு பெண் தொழிலாளியின் கண் போய்விட்டதால், அதற்காக அவளுக்கு ரூ. 28600 நஷ்டஈடு தரவேண்டும் என்று நீதிமன்றத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

## நியாஸாலாந்தில் பஞ்சம்

நைரோபி, ஏப். 24—

ஆப்பிரிக்காவிலுள்ள நியாஸாலாந்தில் மிகக் கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருப்பது காரணமாக, யானைகள், காட்டெருமைகள், நீர்யானைகள், பாபூன் குரங்குகள் முதலியவை உணவு தேட நாட்டிற்குள் புகுந்து விட்டன. வேட்டைக்காரர்கள் இவைகளைச் சுட்டுக்கொன்றனர். இது வரை சுமார் 10,000 மிருகங்களுக்கு மேல் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டும் இம்மாதிரி நிலைமையே ஏற்பட்டிருந்தது.

## மூழ்கிய ட்ராலரை வெளியே எடுக்க ரஷியா முயற்சி

கோபன்ஹேகன், ஏப். 24—

மூழ்கிப்போன ரஷிய ட்ராலரை வெளியே எடுக்க ரோனே தீவையும், நெக்ஸோ துறைமுகத்தையும் ரஷ்யா உபயோகித்துக்கொள்வதில் தங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்று டேனிஷ் சர்க்கார் ஸோவியத் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறது. மூழ்கிய டிராலரின் விலை மதிப்பைவிட அதை வெளிப்படுத்தும் செலவு மிக அதிகமாகும் என்றும் ஏன் இந்த நஷ்டத்தில் ரஷ்யா இக்காரியத்தில் ஈடுபடுகிறதென்பது மர்மமாக இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

## வேட்டையாடலாம் ஆனால் போட்டோ எடுக்கக்கூடாது!

வாஷிங்டன், ஏப். 24—

கென்யாவில் ஹெலிகாப்டரிலிருந்து காட்டு மிருகங்களைப் போட்டோ எடுக்க ஒரு அமெரிக்க கோஷ்டி செய்த முயற்சி தடுக்கப்பட்டிருக்கிறது. கென்யாவின் சட்டப்படி காட்டு மிருகங்களை வேட்டையாடலாமே ஒழிய, அவைகளைப் போட்டோ எடுத்து மிரண்டு போகும்படி செய்யக்கூடாதாம். (ருனோக்)

# மே நாள் விழா!

***மே நாள் விழா!*** மேதினி எங்கும் கொண்டாடப் பெறும் பெருவிழா! உழைப்பாளிகளுக்கு உணர்ச்சி ஊட்டும் உயரிய விழா!

அலைகடலையும், மலை முகட்டையும், அரசியல் எல்லையையும், சமுதாயப் பிரிவையும், நிறவேற்றுமையையும் தாண்டி உலகத் தொழிலாளர் அனைவரும் ஒன்றுகூடி கொண்டாடும் விழா **மே நாள் விழா வாகும்!**

புது வாழ்வைக் கண்டோர்க்கும், புது வாழ்வைக் காண விரும்புவோர்க்கும், காணும் முயற்சியில் ஈடுபட்டோர்க்கும், மே நாள் விழா புது ஆற்றல் அளிக்கிறது—நிலைமையை வலுப்படுத்த, போராட்டங்களில் வெற்றி பெற!

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்தது வறுமையா? என்று பெருமூச்சுடன் கேட்டு, "இனிக் கொஞ்சும் உத்தேசமில்லை, புதியதோர் உலகைச் செய்தே தீருவோம்" என்ற போர் முழக்கத்துடன் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட உழைப்பாளர்கள் உலகெங்கும் போராடுகின்றனர். தங்கள் உழைப்பைக் காட்டி, உழைப்பின் பலனைக் காட்டி, உழைக்காதவர்களின் உல்லாச வாழ்வையும், உழைத்தோரின் உலுத்த வாழ்வையும் காட்டி, சமூக நீதி கேட்கின்றனர்; பொருளாதார வாழ்வு கேட்கின்றனர்; அரசியல் உரிமை கேட்கின்றனர்! அந்தக் கேள்விக் குறியை, ஆட்டிப் படைக்கும் ஆளும் வர்க்கத்தின் முன் நிலைநிறுத்தும் நாளே மே முதல் நாள்!

வாழ்வுக்கான வசதிகள் கேட்கின்றனர் தொழிலாளர்கள் - அவற்றைத் தர மறுக்கின்றனர் முதலாளிகள். தொழிலாளியும் - முதலாளியும் சந்திக்கமுடியாத அளவுக்கு வேற்றுமை வளர்ந்து, உலகெங்கும் இருபடை வரிசைகள் உண்டாகி, போராட்டம் நடைபெறுகிறது.

போராட்டங்கள் பல இடங்களிலே வெற்றியைத் தந்திருக்கின்றன - தராத இடங்களிலே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன; வெற்றி ஏற்படும் வரை நடைபெறுவதற்கான ஊக்கத்தை உழைப்போர் உலகுக்கு அளிக்கும் உறுதி நாளே மே நாள்!

1889-ல் பாரிசில் கூடிய இரண்டாவது சர்வ தேசீய தொழிலாளர் காங்கிரஸில்தான் மே நாள் பற்றிய தீர்மானம் நிறைவேறியது. அதன்படிதான், மே முதல் நாள், தொழிலாளிகளின் உரிமையைப் பாதுகாக்க, பாட்டாளி மக்களை ஒன்று சேர்க்கும் நாளாக மாறியது. அதுமுதல்; மே விழா மேதினி எங்கும் கொண்டாடப் பெறுகிறது!

**மே நாள் உரிமைக்குப் போராடுவதற்குரிய சீரிய நாள்!**

அந்தச் சீரிய நாளைக் கொண்டாட வேண்டிய பொறுப்பு' தொழிலாளரின் நலத்திலே நாட்டங்கொண்டு, அவர்களின் வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பெரும் பங்கு சார்கிறது. உழைப்பாளர்களாலேயே உருவாக்கப்பட்டு, அவர்களையே கொண்டு, அவர்களின் நல்வாழ்வுக்காக பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீங்காக் கடமையுமாகும்—மே விழா கொண்டாடுவது என்பது!

**சக்திக்கேற்ற உழைப்பு - தேவைக்கேற்ற வசதி** என்ற நிலையைக் காண போராடிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், மே நாளில் அந்த முழக்கத்தை நாடெங்கும் முழங்கச் செய்யுமாக!

சிதறிக் கிடக்கும் பல்வேறு வகைத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தல், அவர்களின் இன்றைய நிலைமை உணர்த்துதல், அடைய வேண்டிய நிலையை அறிவித்தல், அவர்களைத் தெளிவடையச் செய்தல், உரிமைப் போராட்டத்துக்குத் தயாராக்குதல், இவைகளைச் செய்ய, பொதுக் கூட்டம் கூட்டுதல், ஊர்வலம் நடத்துதல், கழகக் கொடியேற்றி இலட்சிய விளக்கம் செய்தல், துண்டு வெளியீடுகள் மூலம் மே நாள் சிறப்பை எடுத்துரைத்தல் போன்ற செயல்களில் திராவிட முன்னேற்றக் கிளைக் கழகங்கள் ஈடுபட்டு, மே நாள் விழாவைக் கொண்டாட வேண்டுகிறோம்.

இரா. நெடுஞ்செழியன்
செயலாளர் - பிரசாரக் குழு
தி. மு. கழகம்

## அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் ஸ்வீடனுக்கு இடமில்லை

நியூயார்க், ஏப். 24—

ஸ்வீடனை அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் சேராமல் தடுக்க ரஷ்யா மறைமுகமாக முயற்சி செய்து வருவதாக இங்கு செய்திகிடைத்திருக்கிறது.

அட்லாண்டிக் உடன்படிக்கை விஷயமாக ஸ்வீடன் முழு பங்கு எடுத்துக்கொள்ளாமல் தடுக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளை ரஷ்யா செய்து வருவதாக கூறப்படுகிறது.

பின்லாந்தில் ரஷ்யா எப்படி நடந்து கொள்கிறதென்பதை ஸ்வீடன் கவனித்து வருவதால், கம்யூனிஸ்டுகளே தேர்ந்தெடுக்கப்படாத பின்லாந்து விஷயத்திலும், ரஷ்யா தீவிர நடவடிக்கை எதுவும் எடுக்காமல் விட்டுவைத்திருப்பதாக சொல்லப்படுகிறது. வட பாதுகாப்பு அணியை ஸ்வீடன் ஏற்படுத்த அதன் பார்லிமெண்டின் அனுமதிபெற்றாக வேண்டும். இதை ஸ்வீடன் செய்யாமலிருக்கவே ரஷ்யா முயன்று வருவதாகக் கருதப்படுகிறது.

# தி. மு. கழக பொதுக்கூட்டங்கள்

## திருவாதவூர்

மதுரை, ஏப். 13—

தி. மு. க. துவக்க விழாப் பொதுக்கூட்டம் 9-4-50 அன்று மாலை தரோபதையம்மன் கோவிலுக்கு எதிரில் உள்ள திடலில் நடைபெற்றது. மதுரை ஜில்லா அமைப்பாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். தோழர்கள் எம். அங்குசாமி, எம். எஸ். சிவசாமி, இரா. ச. தங்கப்பழம் ஆகியோர் இயக்கக்கொள்கைகளை விளக்கி, அரிய சொற்பொழிவாற்றினர்கள். தலைவர் முடிவுரை கூற, நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

## கொங்கல்

உடுமலை, ஏப். 11—

தி. மு. க. துவக்க விழாப் பொதுக் கூட்டம் 9-4-50 இரவு தோழர் சுப்பையன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் இ. வெங்கடாசலம் அவர்கள் கொடியின் தத்துவத்தை விளக்கி, கொடியை ஏற்றுவித்தார். தோழர் சந்நாவேலுச்சாமி கழக நோக்கம் பற்றிப் பேசினர். இறுதியில் தோழர் ப. நாராயணன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் குறித்தும், இன்றைய அரசியலாரின் போக்கைக் கண்டித்தும், இந்து மதச் சீர்திருத்த மசோதாவை ஆதரித்தும் பேசினர். பின் செயலாளர் தோழர் எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

## விக்ரமசிங்கபுரம்

விக்ரமசிங்கபுரம், ஏப். 8—

2-4-50 அன்று தி. மு. க. துவக்கவிழா தோழர் ச. கந்தசாமி தலைமையில் ஆரம்பமாயிற்று. தலைவரின் முகவுரைக்குப் பின் தோழர் இரா. ச. தங்கப்பழம் அவர்கள் கழகத்தின் கொள்கைகளை விளக்கி, நாட்டையும் மக்களையும் மறந்து தன்னுடைய பதவிப் போட்டியையே பெரிதாக மதித்து வாழும் காங்கிரஸ்காரர்களின் இழி நிலையைப்பற்றியும், மக்களைச் சீர்திருத்தவேண்டிய அவசியம் பற்றியும் சுமார் 1 மணி நேரம் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினர். செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

## வடசேரி

வடசேரி, ஏப் 16—

14—4—50 அன்று மாலை தி. மு. க. வின் நிற. புதிமுறை, தோழர் வி. எம். ஜான் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. கூட்டத்தில் தோழர்கள் மூவேலபுரம், கை. சுப்பிரமணியன், என். எம். இளங்கோவன், என். குற்றாலிங்கம் ஆகியோர் தி. மு. கழகத்தின் தேவையைக் குறித்துச் சொற்பெருக்காற்றினர்கள். கூட்டம் தலைவர் முடிவுரையோடு இனிது முடிந்தது.

## கோவை

கோவை, ஏப். 12—

9-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா ஜட் அவுசுக்கு பின்புறமுள்ள மைதானத்தில் 9-4-50 அன்று மாலை நடைபெற்றது. தோழர் எஸ். வு. ராசமாணிக்கம் முன்மொழிய தோழர் டி. ஏ. சுந்தரம் வழிமொழிய புலவர் தோழர் கிருட்டினசாமி அவர்கள் தலைமைவகித்து முன்னுரையாக தமிழைப் பற்றியும், தமிழ் நாட்டின் நிலையைப் பற்றியும் சிறிது நேரம் பேசினர்.

பின்னர் மாணவத் தோழர் அண்டோனி தி. மு. க. அவசியம் பற்றிப் பேசினர். தோழர்கள் பி. சி. நடராசன், அ. க. நடராசன், ஆகியோர் இந்தி எதிர்ப்பு, திராவிடரின் வரலாறு ஆகியவைபற்றி முறையே பேசினர்கள். அடுத்துத் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் இன்றைய அரசியலாரின் அடக்குமுறைகளைப் பற்றியும், அரசியல் நிலையைப்பற்றியும், தி. மு. க. வேலைகளின் அவசியத்தைப் பற்றியும் நீண்டநேரச் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைகூற, செயலாளர் நன்றிகூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## மேலப்பழுவூர்

மேலப்பழுவூர், ஏப். 17—

தி. மு. க. சார்பாக 15-4-50 அன்று ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு தோழர் எம். ஆர். செல்லையா தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையில் கூட்டத்தின் நோக்கத்தினை விரிவாக எடுத்துக் கூறினர். அடுத்துத் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் பேசினர். அடுத்துத் தோழர் டி. கே. சீனிவாசன் மதவெறியால் நாடு நலிவு பெற்றுள்ள நிலைமை பற்றியும், இதிகாச புராணங்களை நாம் கண்டிப்பது அதில் கருத்துக்கு ஒவ்வாத புளுகுகள் வெளிவதாலும் கடவுள்களைப் பற்றி மிக இழிவாகக் குறிப்பிட்டு இருப்பதாலும் தான் என்று மிக தெளிவாக விவரித்துப் பேசினர்.

முடிவாக தலைவர் முடிவுரை கூற தோழர் கே. நாகராசன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

## வனவாசி

வனவாசி, ஏப். 11—

தி.மு. கழக சார்பா தோழர் ஈ. கண்ணன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் 19-4-50 அன்று நடைபெற்றது. அதுபோது தோழர் க. வெங்கடாசலம் அவர்கள் மூடப்பழக்கவழக்கங்களைப் பற்றி விவாகம் பேசினர். தோழர் என். வி. நடராசன் அவர்கள் கடவுளின் லீலைகள், திராவிடன் என்றால் யார்? 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று ஏன் கேட்கிறோம் என்பதைப் பற்றி, நீண்ட நேர சொற்பொழிவை ஆற்றினர். கூட்டத்தில் காலிகள் கலகம் செய்ய முயற்சித்தனர். முடிவாக செயலாளர் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## பால்கனில் ரஷ்யா நோக்கம் ஈடேறவில்லை

லண்டன், ஏப். 24—

டிரீஸ்டே ஒரு ராணுவ தளமாக இருப்பதை ரத்து செய்ய ஒரு கவர்னரை நியமிக்கவேண்டும் என்று ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு ஒரு குறிப்பை அனுப்பியிருப்பது, கிழக்கு மத்யதரைக் கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமை ரஷ்யாவிற்குக் கவலையை உண்டாக்கியிருப்பதை விட்டுவிடுவதாக கூறப்படுகிறது.

இத்தாலிக்கும் துருக்கிக்குமிடையே கையெழுத்தாகியுள்ள நட்பு உடன்படிக்கையைக் கண்டு, ரஷியா பீதியடைகிறது என்பது நிச்சயம். கிரேக்கில் அமைதியான நிலைமை ஏற்பட்டதும், இதாலி, கிரீஸ், துருக்கி இம் மூன்றுக்குமிடையே நட்பு ஏற்படுவது சாத்தியம் என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதும் ரஷ்யாவுக்குப்பெருங்கவலையை உண்டாக்கியிருக்கிறது.

ரஷியாவின் மத்திய தரைக் கடல் பிரதேசக்கொள்கை, பால்கன் முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ்வருப்படி செய்வதுதான். ஆனால் இத்திட்டம் பாதி அளவுக்குதான் வெற்றிபெற்றது. டிட்டோவின் எதிர்ப்பால் ரஷ்யாவில் இத்திட்டம் பூரணமாக வெற்றிபெறாமல் போய்விட்டது.

பல்கேரியா, டிட்டோவை எதிர்ப்பதில் முன்னணியில் இருப்பதால், பல்கேரியாவிற்கும் யுகோஸ்லாவிற்கும் எந்த நேரத்திலும் உறவு முறியலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வருகிற கோடைக் காலத்தில் டிட்டோவை அடியோடு ஒழித்துக் கட்ட மாஸ்கோ திட்டம் வகுக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## மிரட்டல் போரை அடக்க மேனுடுகள் முயற்சி

லண்டன், ஏப். 24—

மிரட்டல் போரைக் கட்டுப்படுத்தி எப்படி முற்றுப்புள்ளி வைப்பது என்பது குறித்து, லண்டனில் கூடவிருக்கும் அயல்நாட்டு மந்திரிகள் மாநாட்டில் ஆலோசிக்கப்படுமென்றும் தெரிகிறது.

கிழக்கோடி, தென் கிழக்கு ஆசியா, சீனா, மத்யகிழக்கு, ஜெர்மனி, ஆஸ்திரியா, பெர்லின், டிரீஸ்டே முதலிய பிரச்னைகள் அஜெண்டாவில் விவாதத்திற்காக சேர்க்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது.

யுனைடெட் ஸ்டேட்ஸின் சர்வதேச ஸ்தானிகர் டாக்டர் ஜெஸப் முன்னதாகவே லண்டனுக்கு அனுப்பப்பட்டிருப்பது ஆசிய பிரச்சினைகள் இம்மாநாட்டில் முக்யத்துவம் பெறும் என்று தெரிகிறது.

ஆயுதப்போரை தடுக்கவும், மிரட்டல் போரில் வெற்றிபெறவும் இம்மாநாடு வழிவகைகளை செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளை அட்லாண்டிக் பெடரல் யூனியனாகச் செய்யவும் முயற்சி செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

## ஆஸ்திரேலிய துறைமுகங்கள் புதுப்பிக்கப்படும்

ஸிட்னி, ஏப். 24—

ஆஸ்திரேலியாவுக்குப்பிரிட்டிஷ் ஏற்றுமதிகள் அதிகரிக்க ஆரம்பித்திருப்பதால், சில ஆஸ்திரேலிய துறைமுகங்களைப்புதுப்பிக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

முக்கியமாக க்வீன்ஸ்லாந்திலுள்ள எல்லாத் துறைமுகங்களுமே புதுப்பிக்கப்படவேண்டிய நிலைமையில் இருப்பதாக, கப்பல் வர்த்தக வியாபாரிகள் சங்கத் தலைவர் லகோட் கூறினர்.

## கடமையை செய்தீர்களா?

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்றீர்கள்!

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா என்றீர்கள்!

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்றீர்கள்!

**தலைமைக் காரியாலயம்!** உடனே அமைத்தாலொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெருது என்று அனைவரும் கூறினீர்கள்!

தலைநகரிலேயக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

**குறைபட்ட தோழர்களே!**
**வற்புறுத்திய நண்பர்களே!**
**ஆர்வம்காட்டிய அன்பர்களே!**
**யோசனை கூறிய தோழர்களே!**

## உங்கள் கடமையைச் செய்தீர்களா?

## மேலிடத்துக்குப்பணிய ஐ. மா. அங்கத்தினர் மறுப்பு

—(ல)—

### சட்டசபையில் எதிர்க்கட்சி அமைக்க முடிவு

லக்னோ, ஏப்ரல். 22—

குடியரசு தினத்திலிருந்து சட்டசபையில் தனியிடத்தில் உட்கார்ந்திருந்த 18 ஐக்கிய மாகாண காங்கிரஸ் அங்கத்தினர்கள், பழையபடி காங்கிரசுடன் சேர்ந்து உட்காரும்படி மேலிடம் போட்ட உத்திரவுக்கு அடிபணிவதில்லையென்று முடிவு செய்தது.

புரட்சி செய்த இந்த அங்கத்தினர்கள், சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று இல்லாவிட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காங்கிரஸ் மேலிடம் அறிவித்திருந்தது.

நேற்று மூன்று மணிநேரம் கூடிக்கலந்தாலோசித்து இம்முடிவுக்கு அங்கத்தினர்கள் வந்தார்கள். காங்கிரசுக்கும், இந்த கோஷ்டி அங்கத்தினருக்குமிடையே இருந்த வேற்றுமை மிக அதிகமாக வளர்ந்து விட்டதால், இவர்கள் இனிக் காங்கிரசுடன் சேரவே மாட்டார்களென்றும், பலமான ஒரு எதிர்க்கட்சியைச் சட்டசபையில் ஏற்படுத்திக் கொள்வார்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

சமீபத்தில நடக்கப்போகும் சட்டசபை உபதேர்தலுக்கு, இந்த கோஷ்டியினர் தனியாக அபேட்சகர்களை நியமிப்பார்களென்றும் தெரிகிறது.

புரட்சிசெய்த கோஷ்டியின் தலைவர் தோழர், திரிலோகி சிங்க் நேற்றுதான், டில்லியிலிருந்து லக்னோ வந்து சேர்ந்தார். காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமையாவையும், மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஆகிய இருவரைச்சந்தித்துப் பேசியதைத் தம்முடைய கோஷ்டி அங்கத்தினருக்கு விளக்கியதாகத் தெரிகிறது. கோஷ்டியின் முடிவைக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசிக்கு அனுப்பிவிடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

முக்கியமான பிரச்சினைகளை பற்றிச் சிறிதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாத காரணத்தால், காங்கிரஸ் மேலிடத்துக்கு அடிபணிய முடியாதென்றும், தனியிடத்திலேயே உட்காருவதென்ற முடிவு செய்தவிட்டதாகவும், கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## சென்னையைத் தாக்கிய ஜப்பானிய குண்டின் துண்டு

சென்னை, ஏப்ரல். 24—

இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்றபொழுது 1943 ல் அக்டோபர் 12ந்தேதி சென்னையின்மீது குண்டுதாக்குவதற்காக ஒரு ஜப்பான் விமானத்தால் எறியப்பட்ட குண்டின் ஒருதுண்டு, சென்னை கோட்டை மியூஸியத்திற்கு, சென்னை போலீஸ் கமிஷனர், தோழர் எ. வி. பாத்ரோவால் பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் ஒருசம அளவுபலகையின்மீது இது ஒட்டவைக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது "சென்னையின்மீதுகுண்டுவீச்சு" என்றதலைப்புடன் மேற்கூறிய விவரங்கள் எழுதப்பட்டிருக்கிறது.

1914—ஆண்டு செப்டம்பர் 23-ந் தேதி அன்று இரவு, துறைமுக காவலைப் கப்பற்படைகளிலிருந்து தப்பி ஓடி, சென்னையைத் தாக்கிய "எம்டன்" என்ற ஜெர்மன் கப்பல் எறிந்த ஒருகுண்டின்துண்டையும், கோட்டை மியூஸியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இதைக் கொடுத்தவர் பெங்களூர் பார்டன், ஸன் அண்டு கம்பெனி டைரக்டர் தோழர் வி. கே. ரத்தினசபாபதி, இத்துண்டும் ஒரு சம அளவுபலகையின்மீது ஒட்டவைக்கப்பட்டிருக்கிறது. மியூஸியத்தின் க்யூரேடர் தோழர் கே. ஆர். விஜயராகவன் அந்த இரண்டு துண்டுகள் பொது மக்கள் காணுவதற்கு வைக்கப்படும் என்று கூறினர்.

# தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

## 27 - 4 - 50

மங்கநல்லூர் :—சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி வை. மாணிக்கம்

ரெட்ஹில்ஸ்:-இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கலியாணசுந்தரம்

## 28 - 4 - 50

மேட்டுப்பாளையம்:—(தஞ்சைமாவட்டம்) சி. பி. சிற்றரசு.

சங்கரநயினர்கோவில்:—ஈ. வே. அ. வள்ளிமுத்து, க. அன்பழகன், எம். எஸ். இராமசாமி, எஸ். லிங்கன்.

## 1 - 5 - 50

மே விழாக் கூட்டங்கள்

சென்னை :—சி. என். அண்ணாத்துரை

மதுரை :—அ. சித்தையன்

கோவை :—இரா. நெடுஞ்செழியன்

## சாதி சமய வேற்றுமை பாராட்டாத பள்ளி

யாழ்ப்பாணம், ஏப். 25—

"கடந்த 30 வருடகாலத்தில் யாழ்ப்பாணம் பல துறைகளிலும் முன்னேறியிருக்கிறது. அவற்றுள் குறிப்பிடத் தக்க ஒன்று கரையூர்ச் சேரி ஒழிப்பு" என செண்ட் பட்ரிக்ஸ் கல்லூரி காணிவல் திறப்பு வைபவத்தின் போது கல்லூரித் தலைவர் பிதா டி. எம். எவ். லோங் கூறினர்.

யாழ்ப்பாணம் மேயர் தோழர் சி. பொன்னம்பலம் காணிவலைத் திறந்துவைத்தார்.

காணிவல் என்ற விழாவை முதன் முதலாக 12 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்திவைத்தது இக் கல்லூரி தலைவர்தானென்றும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்டோர்கள் என்ற எவ்வித பாகுபாடுமின்றி, இக் கல்லூரியில் கல்வி கற்க ஏற்பாடு செய்த லோங் பிதாவுக்கு தமிழுலகம் மெத்தக் கடமைப் பட்டுள்ளதென்றும் தோழர் பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

## தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வளர்கிறது

திரிகோணமலையில் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. இந்தக் கட்சியில் அங்கத்தினராகச் சேருவதற்கு அநேகர் விண்ணப்பித்துள்ளார்களென்றும் ஏற்கனவே கொழும்பு மத்திய ஸ்தாபனத்திலிருந்து வரவழைத்த அங்கத்தினப் பத்திரங்கள் செலவாகி விட்டதால், மேற்கொண்டு கொழும்புக்கு எழுதி குறித்த பாரங்களை வரவழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்றும் அறியப்படுகிறது.

இதனுடன் முக்கியஸ்தர்கள் பலருக்கு அறிவிக்க அவகாசம் கிடைக்காமல் போய்விட்டமையாலும், கடந்த ஞாயிற்றுக் கிழமை தமிழரசுக் கிளை ஸ்தாபனம் ஒன்று நிறுவுவதற்கு வித்தியாலைத் தெரு 6-ம் நம்பர் கட்டிடத்தில் கூடிய கூட்டத்தில் நிர்வாகக் கமிட்டியையும் உத்யோகஸ்தர்களையும் தெரிவு செய்வது பின் போடப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

நிர்வாக ஸ்தர்கள் தெரிவு செய்யப்படும் வரையில் தற்காலிகமாக கடமையாற்ற 9 பேர்கள் கொண்ட உப கமிட்டி ஒன்று தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது.

## சினிமா எதிர்ப்பு இயக்கம்

லண்டன், ஏப். 23—

சினிமாப் படங்களில் ஆபாசக் காட்சிகளும், பலாத்காரக் காட்சிகளும் விலக்கப்படும் வரையில், அவற்றைப் பகிஷ்கரிப்பதென்று, கிறிஸ்தவ சங்கம் ஒன்றைச் சேர்ந்த சுமார் 500 பேர் முடிவு செய்திருக்கின்றனர்.

இந்த சங்கத்தின் தலைவர் பின் வருமாறு கூறினர்:— "நாங்கள் சுத்தாம்பரவிகள் அல்ல. சினிமாப் படங்களை நாங்கள் எதிர்க்கவும் இல்லை. நல்ல சினிமாப்படங்கள் இருப்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் சினிமாப் படங்களில் எண்பது சதவிகிதம் கீழ்த்தரமானவைகளாகவே இருக்கின்றன என்று நாங்கள் கருதுகிறோம். இத்தகைய படங்கள் இளைஞர்களுக்கு நன்மை பயக்க முடியாது."

"ஜோன் ஆப் ஆர்க்" "ஹாம்லெட்" போன்ற படங்கள் உயர்ந்த ரசப் படங்கள் என்று அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

## ஏழையரை வாழவைப்பதே சுதந்திரம்

### யாழ்ப்பாண மேயர் கருத்து

"பணக்காரர்கள் மீது வரிகள் போட்டு அந்த வருமானத்தை ஏழைகளின் சகாயத்துக்காகச் செலவு செய்தால் இலங்கையில் இடதுசாரிக் கட்சியினருக்கு இடமே இல்லாது போய்விடும்" என்று யாழ்ப்பாண மேயர் தோழர் சி. பொன்னம்பலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க விருந்தொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தலைமைப் பதவிக்காக இலங்கையில் தலைவர்கள் அடிப்பட்டுக் கொள்ளுகிறார்களே யொழிய, ஏழைப் பொது மக்களுக்காக பிழைப்பவர்கள் யாருமில்லை. இலங்கை சுதந்திரம் பெற்றது அதன் முடிவு காலத்துக்கல்ல ஒவ்வொரு குடிசையிலும் சந்தோஷமும், திருப்தியும் பொங்க வேண்டும் அதுதான் சுதந்திரத்தின் உண்மையான சின்னமாகும். இதை அடையத்தான் இன்றைய அரசாங்கம் வழி காண வேண்டும் என்றும் அவர் கூறினர்.

## எகிப்துக்கு ரஷ்ய கோதுமை

கெய்ரோ, ஏப். 23—

ரஷ்யாவிலிருந்து 1,00,000 டன் கோதுமையையும், அதே அளவுள்ள சர்க்கரையையும் வரவழைக்க எகிப்திய சப்ளை மந்திரி காரியாலயத்தினருக்கும், கெய்ரோவிலுள்ள ரஷ்ய ஸ்தானிகாலயத்தினருக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருவதாகத் தெரிய வருகிறது.

## ரஸாயன முறையில் அரிசி உற்பத்தி

நாகல்லலாம், ஏப். 24—

ரஸாயன முறைகளின்மூலம் அரிசி உற்பத்தியை அதிகரிக்கமுடியும் என்பது, ஜான்வில்பாரில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் வெற்றிபெற்றிருப்பதின் மூலம் தெரியவந்திருக்கிறது.

கிலன்கோனி, மஹோண்டா ஆகிய இடங்களில் நைட்ரோஜன், பாஸ்பேட் ரஸாயன எருக்களை உபயோகித்ததின் மூலம், நெல் உற்பத்தி பன்மடங்கு பெருகியிருக்கிறது.

கிலன்கோனி என்ற இடத்தில் ஒரு ஏக்கர் அமோனியம் சல்பேட் எருவின் விளைவாக 1070 பவுன் மதிப்புள்ள நெல் 1640 பவுன் மதிப்புள்ள நெல் விளைச்சலாக அதிகரித்திருக்கிறது. அமோனியம் ஸல்பேட்டையும், . ஸோடாபாஸ்பேட்டையும் கலந்து உபயோகிப்பதால் அதிக பலன் தருகிறதாம்.

## ஒரு மாதகாலம் ஓயாத நடனம்!

பாரிஸ், ஏப். 24—

லியான்வில் ஒருவாரம் விடாமல் நடனமாடிய 20 தம்பதிகள், ஒரு மாதகாலம் வரையில் விடாமல் நடனமாட உத்தேசித்திருக்கின்றனர்.

இவர்கள் ஆடுவதற்கு ஆர்செஸ்டிராவுக்குப் பதில், கிராமபோன் பிளேட்டுகள் வைத்து வாத்ய ஒலி எழுப்பப்படுமாம்.

இவர்கள் நடனமாடிக்கொண்டேதான் உணவையும் சாப்பிடுவார்களாம். மணிக்கு 15 நிமிடம் ஓய்வு நேரம் அளிக்கப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகிறது. இவர்கள் களைப்படைந்து பூமியில் சாய்ந்துவிட்டால், மூன்று நிமிஷங்களுக்குள் களைப்பு தீர்ந்து எழுந்துகொள்ள வேண்டும். இல்லையேல் இவர்கள் மீண்டும் ஆடக்கூடாது. (ருனோம்)

## இளம் குற்றவாளிகள் சீர்திருத்தம்

டமாஸ்கஸ், ஏப். 24—

இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் விஷயமாக, விஜில் ஒரு மாநாட்டை நடத்த பெல்ஜிய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்கு தன் பிரதிநிதியை அனுப்பும்படி ஸிரியா கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## துருக்கி பொதுத் தேர்தல்

இஸ்தான்புல், ஏப். 23—

துருக்கி பொதுத் தேர்தல் மே 14-ம் தேதி நடைபெறும். இத் தேர்தலுக்கு நிற்போர் பட்டியல் இன்று கொடுக்கப்பட்டது. இதிலிருந்து தற்போது பதவியிலுள்ள உதவி அதிகாரிகளில் 40 சதவிகிதம் தேர்ந்தெடுக்கப்படவில்லையெனத் தெரிகிறது.

தற்போதைய ஆட்சிமுறையில் அதிருப்தி தோன்றியுள்ள காரணத்தால் அடுத்துவரும் தேர்தலில் புதிய அமைப்பு முறையை ஏற்படுத்தவே இத்திட்டம் போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## எண்ணெய் மில்லில் தீ

### ஏழுமணி நேரம் எரிந்தது

பரோடா, ஏப். 22—

தென் பரோடாவில் ஏற்பட்ட தீவிபத்தொன்றால் ஒரு எண்ணெய் மில் அடியோடு எரிந்து சாம்பலாயிற்று. இந்தத் தீ 7 மணிநேரம் எரிந்தது. மூன்று தீயணைக்கும் படையினர் உட்பட ஐவர் காயமுற்றனரென்றும், அவர்களில் இருவருக்குப் பலத்த காயமேற்பட்டதாகவும் தெரிகிறது. தீயின் காரணம் தெரியவில்லை.

# இந்து சட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுபற்றி கவலைகொள்பவர்களாவர்.

இங்ஙனம் முற்றிலும் முரண்பட்ட உலகங்களில் சஞ்சரிக்கும் இரு சாராரிடையே, கருத்து ஒற்றுமையைக் காண்பது 'முயற்கொம்பே'யாகும்.

எனவே, ஆட்சியாளர் இனி எத்தகைய சீர்திருத்தச் சட்டத்தை இயற்ற முன் வந்தாலும், வைதிக புரியினரைப் பற்றிக் கவலைப்படுவதே கூடாது. வைதீகம் வழிக்கு வரவேவராது. ஆனல் நற்பணிக்கு முட்டுக்கட்டை போடுவதில் மட்டும் அவர்கள் பின்வாங்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களைப் புறக்கணித்துவிட்டு துணிந்து பணியாற்றுவதொன்றே நல்லாட்சி விரும்புவோர் செயற்பாலதாகும்.

இந்து சட்டத் திருத்த மசோதாவில் இருதார மணம், திருமண விடுதலை இன்ன பிற சீர்திருத்தங்களை, வைதிகர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்து சட்டத்திருத்த மசோதாவில் ஏதேனும் ஒரு உருப்படியான தீவிரமான சீர்திருத்தம் இருக்கிறது என்று சொல்லப்படுமானல், அவை இந்த இரு பகுதிகளேயாகும். உண்மையிலேயே இந்து மதச் சட்டம் சீர்திருத்தப்படவேண்டுமென்றல், இங்ஙனம் சட்டத்தின் மூலை முடுக்குகளில் ஓரிரு மாற்றங்கள், திருத்தங்கள் செய்வது மட்டும் போதாது. சட்டத்தையே அடியோடு மாற்றியமைக்க வேண்டும் என்பதே நம்போன்றோர் கருத்து. மதம் திருத்தப்பட வேண்டுமானல், மதச்சட்டத்தில் அங்குமிங்குமாக ஒரு சில ஓட்டைகளை அடைத்துவிட்டு வெள்ளையடிக்கும்வேலையல்ல. கட்டிட அமைப்பையே, புதுப்பிக்க வேண்டும் அதாவது 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கோட்பாடு இடம் பெறும்படி செய்தல் வேண்டும். இப்படி ஒரு பெரும் மாறுதலை உண்டு பண்ணும் ஆற்றல், இந்த இந்து சட்டத் திருத்த மசோதாவுக்கு இல்லை. எனவேதான், இதனை ஓர் அரைகுறை சீர்திருத்தம் எனகிறோம் நாம்.

இந்த அரைகுறை சீர்திருத்தத்திற்கே வைதிகபுரியினரின் எதிர்ப்பு உள்ளது என்றல், வைதீகரும் சீர்திருத்தவாதிகளும் எப்படி, எப்பொழுது ஒன்றுபட இயலும்? ஆகவேதான புதுடில்லியில் கூடிய இவ்விருசாராரும் மற்றொரு சாரார் ஒத்த மனத்தராய் இந்து சட்டத் திருத்த மசோதாவுக்குத் தம் முழு ஆதரவையும் தரமுடியாமற்போயிற்று. ஆனல், மாநாடு என்னவோ பெயரளவில் கூடி கலைந்துவிட்டது.

ஆகவே, இனி எதிர்காலத்தில சீர்திருத்த சட்டங்களைச் செய்ய விரும்பும் ஆட்சியாளர் வைதிகரைப் பொருட்படுத்தாமல் விடுத்து, விரைந்தும் துணிந்தும் செயலாற்றவேண்டும்.

இதனை ஏன் வலியுறுத்திக் கூறுகின்றேமெனில், புதுடில்லி மாநாட்டில் வந்திருந்த வைதிகப் பிரதிநிதிகள், இந்து சட்டம் ஆண்டவன்படைப்பு, அதனை மாற்றுவதோ, திருத்துவதோ கூடாது என்று சொல்லியிருக்கின்றனர்.

இப்படிக் கூறும்வைதிகரின் கூற்றுக்குச் செவிசாய்க்கஆரம்பித்தால், அனைத்தும் 'ஆண்டவன்' செயலெனவேகொள்ள வேண்டி நேரிடும். அந்நிலை ஏற்பட்டால் நாடு நலமுருது, சமுதாயம் திருத்தமுருது, பழைமை அகலாது, புதுமை வளராது. எனவே, 'ஆண்டவனை' நம்பி வாழ்வோர் தனித்து நிற்கட்டும்; அரசியலை நம்புவோர் ஆக்கவேலையில் ஈடுபடட்டும்.

## ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்

புதுடில்லி, ஏப். 23—

டாக்டர் அம்பேத்கார்அவர்களால் இந்து சட்டத்திருத்த மசோதா பற்றிய மாநாடு நடந்தபோது, பாராளும் மன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்த 75 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 20 பேர் பெண்கள்.

## கிழக்கு-மேற்கு ஜார்டன் இணைப்பு

அம்மான், ஏப். 24—

எது எப்படியானுலும் கிழக்கு மேற்கு ஜார்டன் இரண்டையும் இணைத்தே தீருவதென்று ஜார்டன் மன்னர் அப்துல்லா கூறினர். அவர் கூறியதாவது.—

அரபுலீக் ஜார்டனை லீகின் அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்குவதாகக் கூறியபோது லீகின் ஏகமனதான முடிவுக்கு எதிராக எந்த அரபுநாடு நடந்து கொண்டாலும், டிஸ்மிஸ் செய்யப்பட வேண்டியதுதான் என்பதை ஒப்புக்கொண்டோம்.

கிழக்கு மேற்கு ஜார்டன் ஒன்றுபடுவதை, லீக் ஆட்சேபிக்கும் பட்சத்தில் அரபுலீகிலிருந்து ஜார்டன் டிஸ்மிஸ் செய்யப்படுவதை நாம் வரவேற்கிறோம்.

## வட ஆப்பிரிக்காவில் அரசியல் கிளர்ச்சி

லண்டன், ஏப். 24—

வடஆப்பிரிக்காவில் பிரெஞ்சு ஆட்சியைக் கவிழ்க்க செய்யப்பட்ட சதி வெளியானதின் விளைவாக சுமார் 150 பேர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

கான்ஸ்டன்டைன் என்ற இடத்தில்தான் இச்சதி மும்முரமாக இருந்ததென்றும், கைது செய்யப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அந்த இடத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.

பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களில் மெஷின்கன், கைகுண்டுகள் முதலியன இருந்தனவாம். கைதுசெய்யப்பட்டவர்களில் அநேகர் யுவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாம்.

## வேர்ட்ஸ்வொர்த் கவிஞரின் நூருண்டு நினைவுவிழா

கிராஸ்மெரி, ஏப். 23—

ஆங்கில கவிஞர் வேர்ட்ஸ் ஒர்த்தின் நூருண்டு நினைவுவிழா இன்று லேக்லாந்து மாவட்டமெங்கும் கொண்டாடப்பட்டது. கிராஸ்மெரி என்னும் இடத்தில்தான் கவிஞரின் உடல் புதைக்கப்பட்டுள்ளது.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.